இறையரசு மலர

“அவர் உங்களுக்குச்
சொல்வதெல்லாம் செய்யுங்கள்” யோவான் 2:5

# DIOCESAN NEWS LETTER VELLORE

**(FOR PRIVATE CIRCULATION ONLY)**

**Vol. 7 OCTOBER - 2011 No. 10**

Dear Fathers, Brothers and Sisters,

Peace and Joy of Jesus be with us all!

Tamil Nadu Church is celebrating the year of Catechesis. Our Diocese too is celebrating in an excellent way. The pastoral centre has planned and is carrying out many activities. The priests, religious and the laity are very much behind and their cooperation is good. At this juncture it is good to think more deeply about this deepening of faith based life of the church.

St. Paul in his letter to the Ephesians says, “... all gifts are given for building up the body of Christ, until all of us come to the unity of the faith and of the knowledge of the son of God, to maturity, to the measure of the full stature of Christ” (Eph 4: 12-13).

This is the objective of the year of Catechesis. Everyone who is baptized is to attain the full stature of Christ. i.e.

Reaching maturity in Christian living. Hence St. Paul calls everyone to lead a life worthy of each one's calling.

While it is the duty of all Christians to grow up in every way into him who is the head, the Christ, the responsibility becomes greater for us bishop, priests and religious as we are given a special call to build up this Christ, the church. This God given task demands certain frame of mind for us disciples which is comparable to the mind set of Christ.

It demands the disciples to posses the following characters: Humility, Gentleness, Patience, bearing with one another with love, preserving the unity of the spirit through the bond of peace and certainly acknowledging the fact that there is one God and our Father.

This is the reason every one of us receive a unique gift from the Holy Spirit and these are to be made available to building up of Church-one, Holy and Apostolic Church. This will ensure that we will be able to lead our faithful to the maturity of Christian living which is the ultimate goal of the year of Catechesis.

It is also a great opportune time to celebrate the Golden and Silver Jubilee of our Priests- a perfect example to the year of Catechesis. They have worked very hard and faithfully in the field of the Lord. The Diocese is honored and privileged to celebrate the Golden Jubilee of our great missionaries, Fr.A.Philominraj and Fr. K.P.Kurian. These two have built, established several parishes and thousands of people. They even pledge their lives, like St. Paul to lots

of suffering, persecution etc. Yet they have been steadfast and faithful. They had left their families and land and dedicated their lives entirely to the life and mission of Vellore Diocese.

Similarly, our two young priests Fr. I. Arockiasamy and Fr. Abraham (Abi) who are celebrating their Silver Jubilee. In spite several problems, even of health they are faithful servants of people of God. Fr. Arockiasamy, in his own quiet and humble way made himself available to people, built up churches and especially people's lives. Fr. Abi, though not physically well, is very active in his legal ministry and more especially animating seminarians, sisters, deacons of various congregations.

I want to assure all four of them that the Diocese of Vellore, with all its priests, religious and the faithful, rejoices with the Jubilarians and thank the Lord for these wonderful gifts. May the Lord continue to bless them. May our Mother, mother of all priests protect them; shower them with love and concern. We remember their families especially parents and brothers and sisters and all who accompany them in their journey.

May our Mother lead the Diocese of Vellore to grow and attain the unity of faith and knowledge of the son of God to a mature manhood.

**+Most Rev. Dr. P. Soundararaju SDB.D.D**
Bishop of Vellore

## Bishop's Programme

| | | | |
|---|---|---|---|
| 02 | Sun | | Confirmation, Pallikonda |
| 03 | Mon | | Confirmation, Madurampet |
| 06 | Thu | | Sacred Heart Convent, Rangapuram |
| 08 | Sat | | Ariyur Feast, Vellore |
| 09 | Sun | M | Confirmation, Veppoor |
| | | E | Gandhi Nagar |
| 11 | Tue | | Marivallam, Chetpet |
| 12-13 | | | Meeting of Statutes, Vellore |
| 20 | Thu | | Monthly Recollection - Jubilee Celebration |
| 23-28 | | | TNBC Meeting, Trichy |
| 30 | Sun | | Chithoor Parish |

## VICAR GENERAL'S OFFICE

**Monthly Recollection & Golden -Silver Jubilee Celebration October 2011**

Recollection for the month of October will be on Thursday, 20 October, 2011 (9.30am - 1.00pm)

**Annual Retreat-2011**

Our Annual Retreat for this year will begin on November 13th Sunday Evening and end on 19th Saturday Morning. I request all the priests to participate in the Annual Retreat without fail. Rev. Dr. E. John Kulandai, Secretary, CCBI Commission, For Vocations, Seminaries, Clergy and Religious, has kindly accepted to preach the retreat. Anyone wants to be absent for special reason has to get permission from the bishop. Please bring your Holy Bible

and Breviary when you come for retreat. Mass Diaries have to be shown to Bishop.

**Rev. Msgr. M. Joe Lourdusamy**
Vicar General

## CATHOLIC PASTORAL CENTRE

### 1. Sacerdotal Golden & Silver Jubilee Celebration:

Rev. Fr. A. Philominraj and Rev. Fr. K.P. Kurian celebrate their Sacredotal Golden Jubilee and Rev. Fr. M. Abraham and Rev.Fr. I. Arockiasamy celebrate their Sacredotal Silver Jubilee this year. As a presbyterium we will have their Golden & Silver Jubilee celebration during the October Monthly Recollection on 20 October, 2011. Let us honour and felicitate the Jubilarians for their wonderful service to the Diocese

### 2. Mission Sunday - 2010

Mission Sunday is to be celebrated on 23rd October 2011. Guiding materials for a meaningful celebration of liturgy are available in the Pastral Centre. Kindly prepare the people to participate very actively in Mission Sunday celebrations and encourage them to contribute generously through mortifications and sacrifices towards the spreading of the Good News of God's Kingdom in the mission countries. Kindly send the Mission Sunday collections to the Diocesan Pastrol Centre as early as possible, so that we can publish it in the Diocesan News Letter. Religious Institutions and Houses are requested

to send their collection seperately. Let your Parish or Institution stand first in the Mission sunday Collection.

### ஞாயிறு மறைக்கல்வி ஆசிரியர்களுக்கு ஒரு நாள் கருத்தரங்கு

ஞாயிறு மறைக்கல்வி பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்களுக்கு ஒரு நாள் கருத்தரங்கு 29.10.2011 சனிக்கிழமை திருவண்ணாமலை உலகமாதா பங்கு ஆலயத்திலும், 30.10.2011 ஞாயிறு வேலூர் மறைப்பணி நிலையத்திலும் நடைபெறும். ஒவ்வொரு பங்கிலிருந்தும் ஐந்து பேர் இக்கருத்தரங்கில் கலந்து கொள்ள வேண்மென்று உங்களை அன்புடன் அழைக்கின்றோம். ஞாயிறு கருத்தரங்கு திருப்பலியோடு நிறைவுபெறும் மதிய உணவு வழங்கப்படும்.

Fr. **S.Malaiyappan,**
Director

## MANAGER'S OFFICE

## POOR EDUCATION FUND COLLECTION FROM THE RELIGIOUS INSTITUTIONS DURING 2011 - 2012 AS ON 22-08-2011 TO 22-09-2011

### STATEMENT OF RECEIPT

| S.No. | Name of the School & Institution | Amount |
|---|---|---|
| 01 | Ansaldo B.Ed., College, Maruthuvambady | 2,000.00 |
| 02 | Mary Immaculate Girls Hr.Sec.School, Tirupathur | 8,184.00 |
| 03 | St. Xavier Matric.School, Soganur | 800.00 |
| 04 | St. Anthony's Matric High School, Tirumalapadi | 1,000.00 |
| 05 | St.Joseph's Girls Primary School, Arni | 450.00 |
| 06 | Cluny Matric.School, Katpadi | 3,000.00 |
| 07 | St.Joseph's Matric.School, Arni | 800.00 |
| 08 | St.Joseph's Girls Hr.Sec.School, Arni | 1,200.00 |
| 09 | St.Charles Hr.Sec.School, Yelagiri | 800.00 |

| | | |
|---|---|---|
| 10 | St.Charles Primary School, Yelagiri | 400.00 |
| 11 | Anne Marie Matric Hr.Sec.School, Thiruparkadal | 3,000.00 |
| 12 | St.Charles Convent, Jolarpet | 300.00 |
| 13 | Infant Jesus Nur. & Pri. Bagayam | 1,000.00 |
| 14 | St.Joseph's B.Ed., College, Jolarpet | 2,000.00 |
| 15 | Auxilium Eng. Pri.School, Polur | 960.00 |
| 16 | Sacred Heart Pri.School, Polur | 730.00 |
| 17 | St. Joseph's Hr.Sec.School, Athipet | 10,200.00 |
| 18 | St.Joseph's Girls Hr.Sec.School, Jolarpet | 1,640.00 |
| 19 | St.Joseph's High School, Kattupadi | 1,420.00 |
| 20 | Don Bosco Matric. School, Gandhi Nagar | 3,300.00 |
| 21 | Annai Vailankanni Matric.School, Mallikapuram | 1,000.00 |
| 22 | Sacred Heart T.T.Institute, Vandavasi | 2,000.00 |
| 23 | St.Ann's Girls Hr.Sec.School, Chetpet | 5,000.00 |

**Manager**

R.C.M. Schools,

Vellore.

## வேலூர் சமூக சேவை சங்கம்

| | |
|---|---|
| 23.08.2011 | காட்பாடி யூனியன் கூட்டம் |
| 25.08.2011 | குடியாத்தம் புலம்பெயர்ந்தோர் குடியிருப்பில் கூட்டம் |
| 27.08.2011 | வாணியம்பாடி யூனியன் கூட்டம் |
| 06.09.2011 | வேலூர் மாவட்ட கூட்டமைப்பின் நிர்வாக குழு கூட்டம் |
| 13.09.2011 | அரக்கோணம் வட்டார பெண்கள் கூட்டமைப்பு கூட்டம் |
| 14.09.2011 | மாலைநேர வகுப்பு ஆசிரியர்களுக்கான பணியிடைப் பயிற்சி கூட்டம் |
| 16.09.2011 | 1) அரக்கோணம் பெண்கள் குழு மூலம் கலப்பு திருமணம் நடைபெற்றது |
| | 2) புதூர் – குருமகேரியில் யூனியன் கூட்டமைப்பு கூட்டம் |

17.09.2011 அணைக்கட்டு யூனியன் கூட்டமைப்பு கூட்டம்

மேற்காணும் யூனியன் கூட்டங்களில் நடைபெறும் உள்ளாட்சித் தேர்தலில் வேட்பாளர் எவ்வாறு வாக்கு சேகரிக்க வேண்டும் என்றும், வெற்றிப்பெற்ற பின்னர் பெறவேண்டிய அரசு நலத்திட்டங்கள், பொறுப்புகளும் கடமைகளும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மரக்கன்று நடுதல் பற்றிய விழிப்புணர்வு, வாழ்வாதார பிரச்சினைகள் அதற்கான தீர்வுகள், கூட்டமைப்பு சீரமைப்பு, மேலாண்மை, மதுவிலக்கு பிரச்சாரம், ஆசிரியர்களின் குணநலன்கள், சமச்சீர் கல்வி, கருத்துருவாக்கம் ஆகிய தலைப்புகளில் பயிற்சி தரப்பட்டது. இதில் பல்வேறு உறுப்பினர்கள் கலந்துக்கொண்டு பயன்பெற்றனர்.

அரசு உதவி பெற மனுக்கள்

| | | | |
|---|---|---|---|
| 1) | கல்விக் கடன் | – | 02 |
| 2) | வேலைவாய்ப்பு | – | 03 |
| 3) | குடும்ப அட்டை | – | 20 |
| 4) | முதியோர் உதவித் தொகை | – | 18 |
| 5) | மாற்றுத் திறனாளிகள் உதவி | – | 17 |

பெறப்பட்ட அரசு நலத்திட்ட உதவிகள்

| | | | |
|---|---|---|---|
| 1) | கல்வி கடன் | – | 01 |
| 2) | முதியோர் உதவித் தொகை | – | 04 |
| 3) | குடும்ப அட்டை | – | 06 |
| 4) | மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை | – | 08 |

செய்தி தொகுப்பு
திருமதி. செலின் & திருமதி. பெலிசி
ஒருங்கிணைப்பாளர்

அருட்திரு. **A.R.**அந்தோணிசாமி
இயக்குநர், வேலூர் சமூக சேவை சங்கம்
ஆயர் இல்லம், வேலூர்.

## கோல்பிங் இந்தியா / வேலூர் மறைமாவட்டம்

02.09.2011 அன்று வேலூர் சமூக சேவை சங்க பயிற்சி கூட்டத்தில் கோல்பிங் உறுப்பினர்களுக்கான இயற்கை விவசாய சாகுபடி பற்றி ஒரு நாள் கருத்தரங்கு நடைபெற்றது. இக்கருத்தரங்கை வி.எஸ்.எஸ்.எஸ். இயக்குநர் அவர்கள் தொடங்கி வைத்து வாழ்த்துரை வழங்கி கோல்பிங் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் முதல் தவணை ரூ.10,000/– வீதம் 5 உறுப்பினர்களுக்கு கொடுத்தார். இக்கருத்தரங்கில் வேலூர் மற்றும் அரக்கோணம் கூட்டமைப்பை சார்ந்த 30 உறுப்பினர்கள் கலந்துக்கொண்டு பயன்பெற்றார்கள்.

## HUNGER AND DISEASE FUND COLLECTION - SEPTEMBER 2011

| | | | Rs. |
|---|---|---|---|
| 1) | Avoor | : | 650 |
| 2) | Eleanganni | : | 9,000 |
| 3) | Udaiyar Kuppam | : | 500 |
| 4) | Mary Mazzarellor Home, Tirupathur | : | 3,000 |

செய்தி தொகுப்பு
திரு. **V.S.**ஜார்ஜ்
ஒருங்கிணைப்பாளர்

அருட்திரு. **A.R.**அந்தோணிசாமி
இயக்குநர், கோல்பிங் இந்தியா
ஆயர் இல்லம், வேலூர்.

## TIRUVANNAMALAI SOCIAL SERVICE SOCIETY

| | | |
|---|---|---|
| 3.9.2011 | – | **RPT Meeting for NFE Staffs** |
| 6.9.2011 | – | **தெள்ளார் ஒன்றிய மக்கள் அமைப்பு கூட்டம்** |
| 12.9.2011 | – | **சிறுவர் பாராளுமன்றம் உருவாக்கம்** |
| 15.9.2011 | – | **சேத்துப்பட்டு ஒன்றிய மக்கள் அமைப்பு கூட்டம்** |
| 16.9.2011 | – | **சிறுவர் பாராளுமன்றம் உருவாக்கம்** |
| 17.9.2011 | – | **திருவண்ணாமலை ஒன்றிய மக்கள் அமைப்பு கூட்டம்** |

| | | |
|---|---|---|
| 19.9.2011 | - | புதுப்பாளையம் ஒன்றிய மக்கள் அமைப்பு கூட்டம் |
| 20,21.9.2011 | - | உரிமை சார்ந்த அணுகுமுறை - கருத்தரங்கம் |
| 22.9.2011 | - | தண்டராம்பட்டு ஒன்றிய மக்கள் அமைப்பு கூட்டம் |
| 29.9.2011 | - | மாவட்ட பெண்கள் கூட்டமைப்பு கூட்டம் |
| 30.9.2011 | - | **TVMSS** பணியாளர்கள் மாதாந்திர கூட்டம் |

மேற்காணும் யூனியன் கூட்டங்களில் மக்கள் அமைப்பு உறுப்பினர்கள் உள்ளாட்சி தேர்தலில் பங்கெடுக்கும் விதத்தில் உள்ளாட்சி தேர்தல் குறித்த விழிப்புணர்வு மற்றும் பங்கேற்பாளர்க்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டது. அரசு நலத்திட்டங்கள் பெறுவதற்கான வழிமுறைகளும் பயிற்சியின் மூலம் அளிக்கப்பட்டது. இதில் அந்தந்த யூனியன் மக்கள் அமைப்பு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

பயிற்சியின் விளைவாக மக்கள் அமைப்பினர்
அரசு / தனியார் நிறுவனங்கள் மூலம் பெற்ற நலத்திட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| முதியோர் உதவித்தொகை | - 7 | பேர் | 7,000/- |
| திருமண உதவித்தொகை | - 8 | பேர் | 2,00,000/- |
| தொண்டு நிறுவனம் மூலம் பெற்ற கடன் | - 7 | குழுக்கள் | 13,10,000/- |
| வங்கி மூலம் நேரடி கடன் | - 5 | குழுக்கள் | 12,00,000/- |

குடும்ப அட்டைக்காக 5 நபர்கள் மனு அளித்துள்ளனர்.

செய்தி தொகுப்பு
திரு. லூ.தாமஸ் இன்பசேகர்
முதன்மை ஒருங்கிணைப்பாளர்

அருட்பணி. **M.**ஜான்நிக்கோலாஸ்
இயக்குநர்

## மறைமாவட்ட பணிக்குழுக்கள்

### 1. Health Commission

The VDHA meeting was held on 20.09.2011 in VSSS hall, Bishop's House, Vellore at 10.00 A.M. Mr. Kumaravel (Helath Worker) from Vedaraniyam gave the talk on "Food

is the medicine and the Body is the Doctor **("உணவே மருந்து உடலே மருத்துவர்")**. The good number of sisters attended this meeting.

Fr. K.S.Gnana Jyothi
Secretary.

## *இளைஞர் பணிக்குழு செய்திகள்*

### *உலக இளைஞர் மாநாடு - ஸ்பெயின்*

13வது உலக இளைஞர் மாநாடு ஸ்பெயின் நாட்டுத் தலைநகர் மாட்ரிட்–ல் கடந்த ஆகஸ்ட் மாதம் 11–21 வரை சிறப்பாக நடந்தேறியது. உலகின் எல்லா நாடுகளிலிருந்தும் ஏறக்குறைய 20 லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர் இளம்பெண்கள் இம்மாநாட்டில் கலந்துகொண்டார்கள். இந்தியாவிலிருந்து 800க்கும் மேற்பட்டோர் பங்கேற்றார்கள். நமது மறைமாவட்டத்திலிருந்து, இளையோர் பணிக்குழு இயக்குனர் அருள்பணி ஆரோக்கியா அவர்கள் கலந்து கொண்டார்கள்.

''இயேசு கிறிஸ்த்துவில் வேரூன்றியவர்களாகவும், அவர்மீது கட்டியெழுப்பப்பட்டவர்களாகவும் இருங்கள். நீங்கள் கற்றுகொண்ட விசுவாசத்தில் உறுதியாக நில்லுங்கள்'' (கொலோ 2:7) என்ற கருப்பொருளில் உருவாக்கப்பட்ட இம்மாநாடு இரண்டு பகுதிகளாக பிரிக்கபட்டு நடத்தப்பட்டது. முதல் பகுதி மறைமாவட்ட அனுபவம், இரண்டாம் பகுதி மாநாடு கருத்தமர்வு. மாநாட்டிற்கு வந்திருந்த அனைத்து பங்கேற்பாளர்களும் சிறு சிறு குழுக்களாக பிரிக்கப்பட்டு, ஸ்பெயின் நாட்டிலுள்ள 40 மறைமாவட்டங்களுக்கு அனுப்பட்டார்கள். 60 பேர் கொண்ட எங்கள் குழு செகோவியா மறைமாவட்டத்திற்கு அனுப்பபட்டோம். இங்குதான், 16–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புனித சிலுவை அருளப்பரின் (John of the Cross) கல்லறை உள்ளது. ஐந்து நாட்கள் தங்கியிருந்த இவ்விடத்தில், புனித சிலுவை அருளப்பர் வாழ்ந்த இடங்கள், தங்கி செபித்த மலைகள் எல்லாம் சுற்றிபார்த்தோம். ஒவ்வொரு நாளும் சிறப்பு சிலுவைப்

பாதைகள் நடத்தபட்டன. அடுத்த நாள் அவிலா நகருக்கு பயணம் செய்து, புனித அவிலா திரேசம்மாள் வாழ்ந்த இடங்கள், அவர் திருமுழுக்கு பெற்ற ஆலயம், அவர் பயன்படுத்திய பொருட்கள் வைக்கப்பட்டுள்ள மியுசியம் ஆகியவற்றை கண்டு களித்தோம்.ஓங்கி உயர்ந்த கட்டிடங்கள், கலை நுணுக்கங்களுடன் கட்டப்பட்டுள்ள ஆலயங்கள், கோட்டைகள் காண்போரை வெகுவாக கவர்ந்தன.

ஐந்து நாட்கள் கழித்து மாநாட்டு கொண்டாட்டம் மாட்ரிக் நகரில் தொடக்க திருப்பலியுடன் ஆரம்பமானது. எங்கு பார்த்தாலும் கூட்டம் கூட்டமாய் இளைஞர் பட்டாளம். ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் என்று மாட்ரிட் நகரமே களைகட்ட தொடங்கியது. ஓவ்வொரு நாளும் காலையில் இளைஞர்களுக்கான மறைகல்வி வகுப்புகளும், மாலையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. மறைக்கல்வி வகுப்புகள் பல்வேறு மொழிகளில் நகரத்தின் பல பங்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இவ்வகுப்புகளை கருதினால்கள், பேராயர்கள் எடுத்தார்கள். நாங்கள் ஆங்கிலவழி மறைக்கல்வி வகுப்புக்குச் சென்றோம். எங்களுக்கு அமெரிக்காவின் பாஸ்டன் உயர் மறைமாவட்ட பேராயர், கருதினால் சேன்பாட்ரிக் வகுப்பை எடுத்தார், வகுப்புகள் முடிந்தவுடன் ஏற்பாடு செய்யபட்ட கலந்துரையாடல் இளைஞர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. மாலை நேரங்களில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யபட்டிருந்தன. இக்கலை நிகழ்ச்சிகளை ஒவ்வொரு நாடும் தங்களது பாரம்பரியம், கலாச்சார விழுமியங்களை வெளிக்கொணரும் விதத்தில் அமைத்திருந்தது. இவை ஒரு சில மணித்துளிகளில் பல நாடுகளின் கலச்சாரத்தை பற்றி அறிந்து கொள்ள உதவியாக இருந்தது.

மாநாட்டின் கடைசி நாளில் திருத்தந்தையின் விழிப்பு இரவு செபமும் தொடர்ந்து திருப்பலியும் இருந்தது. ஏற்க்குறைய 1500 ஏக்கர் பரப்பளவு கொண்ட விமான நிலையத்தில் இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கண்ணுக்கு எட்டிய தூரம் வண்ண கோளத்தில் இளைஞர்கள் கூட்டமும் பல்வேறு நாட்டு கொடிகளும் கண்ணுக்கு விருந்தாய் அமைந்தன.

திருத்தந்தையின் மேடை எங்கிருக்கிறது என்றே தெரியாத சூழல். ஆனால் ஆங்காங்கே ராட்சத திரைகள் வைக்கப்பட்டிருந்தன. மாலை 8 மணியளவில் திருத்தந்தை திவ்விய நற்கருணையை ஸ்தாபகம் செய்து விழிப்பு இரவு செபத்தை தொடங்கிவைத்தார். திடீரென வந்த சூறைகாற்று பங்கேற்பாளர்களை சிறிது நேரம் நிலைக்குலைய செய்தாலும், இரவு முழுவதும் நற்கருணை நாதரோடு இளைஞர்கள் ஒன்றித்திருந்தது அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது. மறுநாள் காலை 9 மணியளவில் மாநாட்டின் நிறைவு திருப்பலி திருத்தந்தை தலைமையில் ஆரம்பமானது. ஏறகுறைய ஆயிரத்திற்கும் மேற்பட்ட குருக்கள், ஆயர்கள், கருதினால்கள் கூட்டுத்திருப்பலியில் பங்கேற்றார்கள். திருப்பலி முடிவில், அடுத்த உலக இளைஞர் மாநாடு 2013 ஆம் ஆண்டு பிரேசில் நாட்டில் நடக்கும் என்று திருத்தந்தை அறிவித்து மாநாட்டை முடித்து வைத்தார்.

உலக இளைஞர் மாநாடு ‘‘உலக கத்தோலிக்க இளைஞர்களை ஒன்று சேர்க்கும், அவர்களது விசுவாசத்தை ஆழப்படுத்தும்‘‘ என்று நம் முன்னால் திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் கண்ட கனவு மாநாடு முழுவதும் நிஜமாக்கி கொண்டிருந்தது!.

## *இளைஞர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி*

தமிழக ஆயர் பேரவையின் இளைஞர் பணிக்குழு வழிகாட்டுதலில், நமது பணிக்குழு, இளைஞர் இளம் பெண்களுக்கான தலைமைத்துவ பயிற்சியை நடத்தியது. ஆகஸ்டு 27, 28 ஆகிய தேதிகளில், சேத்துப்பட்டு, கோடப் – பயிற்சி மய்யத்தில் நடைபெற்ற இப்பயிற்சியை இயக்குனர் பணி ஆரோக்கியா வழிநடத்தினார். சென்னையிலிருந்து வருகைபுரிந்த சகோ. ரீட்டா (வழக்கறிஞர்) சகோ. எஸ்தர் ராணி ஆகியோர் பயிற்சியில் கருத்தாளர்களாக பங்கேற்றனர். 56 இருபால் இளைஞர்கள் பங்கேற்ற பயிற்சி சிறப்பாக நடந்தது. இளம் தலைமுறையினருக்கு மிகவும் பயனுள்ளவிதமாக அமைந்தது.

இளைஞர் சந்திப்புகள்

01.09.11 மற்றும் 04.09.11 ஆகிய இரு நாட்களில் முறையே கொரட்டாம்பட்டு – வேளை நகர் (கிளைப்பங்கு) இளைஞர் இயக்கமும் இராந்தம் கொரட்டூர் பங்கு இளைஞர் இயக்கமும், இயக்குனர், களப்பணியாளரால் சந்திப்பு செய்யப்பட்டது. இளைஞர்களிடையே, மறைமாவட்ட செயல்பாடுகள், வேலை வாய்ப்பு செய்திகள் பகிர்ந்து கொள்ளப்பட்டது. பங்கு இயக்கமாக செயல்படுவதின் அவசியம் உணர்த்தப்பட்டது.

## SC / ST / BC - *பணிக்குழு*

தமிழக ஆயர் பேரவையின் பணிக்குழு ஒருங்கிணைக்கும், இவ்வருடத்திற்கான ஏழுமாத இளம்பெண்கள் வாழ்வாதார பட்டய பயிற்சிக்காக, நமது மறைமாவட்டத்தின் சார்பில் செல்வி. சலோமி (தச்சாம்பாடி) செல்வி. மார்த்தா (புலவன்பாடி) ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவ்விருவரும் பயிற்சியில் சிறப்பாக பங்கெடுத்து வெற்றியடைய பணிக்குழு சார்பில் வாழ்த்துகிறோம்.

களப்பணியாளர்கள்
அருண்குமார்.ம
லென்சியா

என்றும் அவர் பணியில்
பணி. ஆரோக்கியா
செயலர்.

## மறைவட்ட செய்திகள்

### *1. தோமினிக் சாவியோ மேல்நிலைப்பள்ளி ,சேத்துப்பட்டு*

ஆசிரியர்களுக்கான ஒரு நாள் கருத்தரங்கு

பள்ளி கல்வி ஆண்டு தொடக்கத்திலே ஆசிரியர்களை நெறிப்படுத்தவும், ஊக்குவிக்கவும், இலக்கு அமைக்கவும் அவர்களுக்காக ஒருநாள் கருத்தரங்கு (30.7.2011) சனிக்கிழமை மாதா மலையில் ஏற்பாடு செய்யப்பட்டது. சென்னை வழிகாட்டியின் இயக்குநர் அருட்பணி லியோ அவர்கள் சிறப்பான கருத்துக்களை வழங்கி, குழு கலந்துரையாடலையும்

நடத்தினார். திரு. மைக்கேல் உளவியல் தொடர்பான கருத்துக்களை வழங்கினார். ஆசிரியர்கள் மிகுந்த உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் ஆர்வத்துடனும் இதில் கலந்து கொண்டனர்.

10–ஆம், 12–ஆம் மாணவர்களுக்கான ஒருநாள் கருத்தரங்கு

எம் பள்ளியில் படிக்கும் 10ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு "வாழ்வில் எவ்வாறு முன்னேறுவது" என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கு நடைபெற்றது. திருத்தொண்டர் வின்செண்ட் பாபு சே.ச இந்த கருத்தரங்கை நடத்தி தந்தார். வாழ்வில் முன்னேறுவதற்கான படிநிலைகளை ஆர்வத்துடன் மாணவர்கள் கற்று அறிந்தனர்.

முதல் வெள்ளி திருப்பலி

எம் பள்ளியில் முதன் முதலாக முதல் வெள்ளி பக்தி முயற்சியாக மாதத்தின் முதல் வெள்ளி கிழமையில் திருப்பலி நிறைவேற்றும் வழக்கத்தை துவங்கியுள்ளோம். அதன்படி சென்ற மாதம் 5.8.2011 முதல் வெள்ளியன்று அருட்பணி ஜேம்ஸ் இயக்குநர் கோடப் நிறுவனம், எம் பள்ளிக்கு வருகை தந்து திருப்பலியை நிறைவேற்றினார். அதே நாளில் நமது கல்வி ஆயர் மேதகு ஆயர் சௌந்தர ராஜு பெரியநாயகம் பெயரால் கல்வி நிதியையும் தொடங்கி வைத்தார். 12 ஆம் வகுப்பில் முதல் இடம் பெறும் மாணவருக்கு நமது ஆயரின் பெயரால் சிறப்பு பரிசு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டதோடு மட்டுமல்லாமல் ரூ.10,000 பள்ளிக்கு வழங்கினார். தந்தையின் தாராள உள்ளத்திற்கு பள்ளி நன்றி சொல்கிறது. ஆசிரியர்களும் மாணவர்களும் மிகுந்த ஆர்வத்துடன் திருப்பலியில் பங்கேற்றனர்.

அருள்பணி பவுல் ஆரோக்கியம்.

## *2. தூய ஆரோக்கிய அன்னை ஆலயம், இராணிப்பேட்டை*

பங்கின் பாதுகாவலி தூய ஆரோக்கிய அன்னையின் ஆண்டுப் பெருவிழா 27.8.11 அன்று மாலையில் பேரருட்தந்தை **Dr. S.**லூர்துசாமி அவர்களின்

தலைமையில் கொடியேற்றத்துடன் திருப்பலி சிறப்பிக்கப்பட்டது. 1, 2.9.2011 இரு நாட்களும் விழாவுக்கு தயாரிப்பாக நற்செய்தி கூட்டம் தருமபுரி அருட்தந்தை **T.K.**ஸ்டீபன் அவர்களால் நடத்தப்பட்டது. நற்கருணை பெருவிழா மறைபணி நிலைய இயக்குனர் பேரருட்தந்தை **S.**மலையப்பன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. புதுநன்மை வழங்கப்பட்டது. 8.9.11 அன்று காலையில் விழா திருப்பலி மேதகு ஆயர் **Dr. P.**சௌந்தரராஜ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. 141 பேருக்கு உறுதிபூசுதல் அருட்சாதனம் வழங்கப்பட்டது. மாலையில் பங்குதந்தை **A.**ராயப்பன் அவர்களின் தலைமையில் திருப்பலி, தேர்பவனி நகரின் முக்கிய பகுதிகள் வழியாக சென்றது. ஏராளமான மக்கள் சமய பேதமின்றி அன்னையிடம் பக்தி பரவசத்துடன் பங்கேற்று செபித்தார்கள் நற்கருணை ஆசியுடன் கொடி இறக்கப்பட்டு விழா இனிதே நிறைவு பெற்றது.

இவண்
**N.**டேவிட், வேதியர்
இராணிப்பேட்டை

## *3. சிறந்த பள்ளியாக அரக்கோணம் தூய நெஞ்சு மெட்ரிக் பள்ளி தேர்வு*

கத்தோலிக்க மறை மாவட்டத்தில் சிறந்த பள்ளியாக அரக்கோணம் தூய நெஞ்சு மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி தேர்வு செய்யப்பட்டு பரிசு வழங்கப்பட்டது. கத்தோலிக்க மறை மாவட்டமானது வேலூர் – திருவண்ணாமலை மாவட்டத்தை உள்ளடக்கிய நிர்வாகம் கொண்டது. இந்த நிர்வாகத்தின் ஆயராக சௌந்தரராஜ் பதவி வகித்து வருகிறார். இவரது 6ஆம் ஆண்டு பணி துவக்க விழா ஏற்பாடு செய்யப்பபட்டது.

இவ்விழாவில் இம்மாவட்டதை உள்ளடக்கிய 6 மெட்ரிக் பள்ளிகளில் சிறந்த பள்ளியாக அரக்கோணம் தூய நெஞ்சு மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி தேர்வு செய்யப்பட்டது. அதற்கான பரிசு கோப்பை பள்ளி தாளாளரும் ஆலய பங்கு தந்தையுமான டேனியலிடம் வழங்கப்பட்டது. வேலூர் மறை மாவட்ட

அளவில் முதலிடம் பெற்ற ப்ளஸ் டூ மாணவிகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது.

பங்குதந்தை
அருட்பணி. டேனியல்

### *3. திரு இருதய ஆண்டவர் ஆலயம், அரக்கோணம்*

20.08.2011 அன்று எமது பங்கிலிருந்து ஆண்கள், பெண்கள் சுமார் 200 நபர்கள், புனித வேளாங்கன்னி அன்னையின் திருத்தலத்திற்கு ஆன்மீக பாதயாத்திரை மேற்கொண்டார்கள், கடந்த 30 நாட்களாக தவ உடை, செபமாலை அணிந்து தங்களை தயார் செய்து கொண்டார்கள். பேரருட்தந்தை டேனியல், அருட்தந்தை அற்புதராஜ் அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டு, செபித்து, ஆசீர் வழங்கி, வழி அனுப்பப்பட்டார்கள். நடைபயணம் மேற்கொண்டவர்கள் செபமாலை செபித்துக்கொண்டு தங்களது ஆன்மீக பயணத்தை தொடங்கினார்கள்.

20.08.2011 அன்று காலை 10.30 மணியளவில் எமது பங்கிலுள்ள அனைத்து நோயாளர்கள் மற்றும் முதியோர் இவர்களை அழைத்து சிறப்புத்திருப்பலி பங்குதந்தை நிறைவேற்றினார். சிலர் பாவசங்கீர்த்தனம் செய்து தங்களை தயார் செய்து கொண்டார்கள். திருப்பலியின் இறுதியில் அனைவரையும் எண்ணெய்ப்பூசி செபித்து ஆசீர் வழங்கினார்.

இவண்
**P.**தேவராஜ், வேதியர்

### *4. காட்பாடி கிளைபங்கு, சேவூர்*
*தூய லூர்து அன்னை ஆண்டுப்பெருவிழா*

தூய லூர்து அன்னை பெருவிழாவை முன்னிட்டு 28.8.2011 அன்று 1 நாள் சிறப்பு தியானம் பேரருட்பணி. அல்போன்ஸ்தாஸ் காந்திநகர் பங்குதந்தை தனது குழுவுடன் சிறப்பாக வழி நடத்தினார்கள். 2.9.2011 கொடியேற்றத்துடன் விழா ஆரம்பமானது. மண்ணின் மைந்தர் அருட்பணி.

ராஜ்மைக்கேல், **SDB, B.Ed., T.T.C.** கல்லூரி முதல்வர் காட்பாடி அவர்கள் கொடியேற்றி திருப்பலி தலைமையேற்று நடத்தினார்கள். 3ம் தேதி நற்கருணை பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. விருது விளங்கினான் புனித அந்தோணியார் திருத்தல தந்தை அருட்பணி சுந்தர் அவர்கள் தலைமையேற்று திருப்பலி, நற்கருணை பவனியை நடத்தினார்கள். பிள்ளைகளுக்கு புது நன்மை வழங்கப்பட்டது. தூய லூர்து அன்னை ஆலய பெருவிழா பேரருட்பணி **S.**அருளப்பன் வேலூர் மறைமாவட்ட பொருளாளர் தந்தை தலைமையேற்று விழா திருப்பலியை நடத்தினார்கள். திருப்பலி முடிந்து அன்னையின் தேர் பவனி நடைபெற்றது. பங்குதந்தை அருட்பணி. யேசு ஜெயபாலன் அவர்கள் அனைத்து ஏற்பாடுகளையும் திட்டமிட்டு நடத்தினார்கள்.

இவண்

வேதியர்

**A.**ஞானசேகரன், காட்பாடி.

## *5. அருளுதயம் தியான ஆசிரமம், அ.கட்டுப்பபடி*

உடல்நலம், மனவளம், உயிர்வளம் பெற்று முழு நல வாழ்வு பெற அருளுதயம் தியான ஆசிரமம் பல தியானங்களையும், யோகா பயிற்சிகளையும் சிறப்பாக அளிப்பதில் அதிக முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. சிறப்பாக ஆகஸ்டு 13 – 14 தேதிகளில் புனித தொன்போஸ்கோ, காந்தி நகரைச் சேர்ந்த (XI, XII) வகுப்பு இல்ல மாணவர்கள் 65 பேர் ஆசிரமத்தில் தங்கி யோகா மற்றும் தியானங்களை அருட்தந்தை K.E.சிற்றரசு, ச.ச. மற்றும் சகோ. பெலவேந்திரன் ஆசிரியர் இவர்களின் வழிநடத்தல் மூலம் பயிற்சி பெற்றார்கள்.

ஆகஸ்டு 21 – 27, மற்றும் செப்டம்பர் 24 – 30 தேதிகளில் பிரான்சிஸ்குவின் புனித அலோசியஸ் கொன்சாகா சபை அருட்சகோதரிகள் இரு குழுவாக ஆண்டு தியானம் செய்தார்கள். இந்த தியானத்தை அருட்தந்தையர்கள் சிரில், D.V.ஜேசுதாஸ்,ச.ச., சிற்றரசு, ச.ச. சிறப்பாக ஒழுங்கு செய்தார்கள். நோயற்ற

வாழ்வே குறைவற்ற செல்வம் என்று முழுநல வாழ்வு வாழ, நிறை மகிழ்ச்சியடைய இறை அருள் பெற வேண்டுமா வாருங்கள் உங்களை அன்புடன் அழைக்கிறது அருளுதயம் தியான ஆசிரமம்.

தொடர்புக்கு

**K.E.**சிற்றரசு, ச.ச

அருளுதயம் தியான ஆசிரமம், ஆ.கட்டுபடி, வேலூர் – 11

அலை பேசி: 94443 07460

## Ordination Day

| | |
|---|---|
| Rev. Fr. R. Fathimanathan | 13.10.1980 |
| Rev. Fr. M. Sebastian | 13.10.1980 |

## Birthday



| | |
|---|---|
| Rev. Fr. S. Lazar Savarimuthu | 02.10.1951 |
| Rev. Fr. D. Arockiasamy | 06.10.1978 |
| Rev. Fr. G. Arockiasamy | 07.10.1950 |
| Rev. Fr. A. Joseph | 07.10.1972 |
| Rev. Fr. John Valarkott | 10.10.1932 |
| Rev. Fr. A. Maria Michael | 12.10.1944 |
| Rev. Fr. P. Albin Justus | 14.10.1953 |
| Rev. Fr. P. Leo Maria Joseph | 15.10.1980 |
| Rev. Fr. K. P. Kurian | 17.10.1932 |
| Rev. Fr. P. Alexander | 24.10.1967 |
| Rev. Fr. D. Maria Joseph | 28.10.1941 |
| Rev. Fr. S. Paularasu | 28.10.1977 |

## Intentions



Let us pray for the terminally ill, that in their sufferings they may be sustained by faith in God and by the love of others.

Let us pray that the celebration of World Mission Sunday may increase in the People of God the passion for

evangelization and the support of missionary activity through prayer and economic aid for the poorest Churches.

## Calendar

| | | |
|---|---|---|
| 01 | Sat | St. Theresa of the Child Jesus |
| **02** | **Sun** | **27th Ordinary Sunday** |
| 04 | Tue | St. Francis of Assisi |
| 06 | Thu | St. Bruno |
| 07 | Fri | Blessed Virgin Mary of the Rosary |
| **09** | **Sun** | **28th Ordinary Sunday** |
| 14 | Fri | St. Callistus |
| 15 | Sat | St. Teresa of Jesus |
| **16** | **Sun** | **29th Ordinary Sunday** |
| 17 | Mon | St. Ignatius of Antioch |
| 18 | Tue | St. Luke |
| 19 | Wed | St. Paul of the Cross |
| **23** | **Sun** | **30th Ordinary Sunday** |
| 24 | Mon | St. Antony Claret |
| 28 | Fri | St. Simon and Jude |
| **30** | **Sun** | **31st Ordinary Sunday** |

## Necrology

| | | |
|---|---|---|
| 1. | Rev. Fr. Joseph Parampet | 01.10.1989 |
| 2. | Rev. Fr. P. K. Antony SDB | 02.10.1983 |
| 3. | Rev. Fr. J. Martin SDB | 03.10.1986 |
| 4. | Rev. Fr. V. P. Antony Samy | 03.10.2000 |
| 5. | Rev. Fr. A. Devadoss | 04.10.1989 |
| 6. | Rev. Fr. Edward Giterrez SDB | 08.10.1976 |
| 7. | Rev. Fr. Maggioni SDB | 21.10.1983 |
| 8. | Rev. Fr. Mary Sochi SDB | 24.10.1974 |
| 9. | Rev. Fr. Henry Remeri SDB | 24.10.2000 |
| 10. | Rev. Fr. G. Antony Adimai | 24.10.2010 |
| 11. | Rev. Msgr. Menezes | 26.10.1994 |
| 12. | Rev. Fr. Varghees SDB | 27.10.1983 |
| 13. | Rev. Fr. Jose M. Lawrence | 27.10.2003 |
| 14. | Rev. Bro. Xavier Savarimuthu SDB | 28.10.1967 |